FIRST INFORMATION REPORT | TAMIL NADU POLICE
---|---
முதல் தகவல் அறிக்கை | INTEGRATED INVESTIGATION FORM-I

~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(குற்ற விசாரணை முறைச் சட்டம் பிரிவு 154 இன் கீழ்)~~
SEC 173 BNSS

C 8109785

1\. District : மாவட்டம் Virudhunagar PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption Year: ஆண்டு 2025 FIR No.: மு.த.அ. எண் 01/2025 Date: நாள் 09.03.2025

2\. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: PC Act 1988 as Amended in 2018 Sections பிரிவுகள்: u/s 7

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3\. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 08.03.2025 Date to : நாள் வரை 09.03.2025

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 22.00 hrs Time to : நேரம் வரை 01.00 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 09.03.2025 Time : நேரம் 04.30 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 09.03.2025 Time : நேரம் 04.30 hrs

4\. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக

5\. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — விருதுநகர் மாவட்ட எல்லையிலுள்ள விருதுநகர் ஊரக காவல்நிலைய சரக சத்திர ரெட்டியபட்டி காவல் சோதனை சாவடி அருகில் மற்றும் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிட 3ஆம் தளத்தில் உள்ள உதவி ஆணையர் (கலால்) அலுவலகம், விருதுநகர் சுமார் 10 கி.மீ வடக்கு

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமானால், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6\. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டவர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.P.சதீஷ்காந்தி

(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.பெருமாள்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 15.06.1985

(d) Nationality : நாட்டினம் இந்தியன்

(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்

Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் தனிவட்டாட்சியர்/ மாவட்ட துணை ஆய்வு குழு அலுவலர்

(g) Address : முகவரி சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலகம், (நி.எ) (சிப்காட்), புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விருதுநகர்.

7\. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டுக்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு.கணேசன் 59/2025, த/பெ.ராகவன், உதவி ஆணையர் (கலால்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விருதுநகர்.

8\. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டவரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

-இல்லை-

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved : Not arise
களவாடப்பட்ட / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: Not arise
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து அனுப்பப்படுகிறது.</u>

நான் (இரா.பூமிநாதன், காவல் ஆய்வாளர்) இன்று 09.03.2025ஆம் தேதி அதிகாலை 04.00 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விருதுநகர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.ராஜீவ்காந்தி அவர்கள் நிலையத்தில் ஆஜராகி ஒரு புகார் மனுவையும் அத்துடன் திடீர் இணை ஆய்வு செயல்முறைகள், எதிரியின் வாக்குமூலம், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.3,75,500/- மற்றும் அந்த ரூபாய் நோட்டுக்கள் சுற்றியிருந்த கருப்புகலர் மாங்கிகுல்லா மற்றும் திருமண தாம்பூலம் மற்றும் விபரங்கள் அச்சக்கப்பட்ட மஞ்சள்கலர் துணிப்பை ஆகியவற்றையும் சேர்த்து திரு.கணேசன், உதவி ஆணையர் (கலால்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விருதுநகர் என்பவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த புகார் மனு பின்வருமாறு: அனுப்புனர் P.ராஜீவ்காந்தி, (39/2025), த/பெ.பெருமாள், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், விருதுநகர் மாவட்டம். தனி வட்டாட்சியர் (சிப்காட்), சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலகம், (நி.எ) (சிப்காட்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விருதுநகர். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். பொருள்: விருதுநகர்

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at Item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the investigation / Refused investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் குறிப்பிட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 09.03.2025 at 05.00 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் B.BOOMINATHAN.
Rank: நிலை [illegible]

**விருதுநகர் ஊ.த.க.பிரிவு குற்ற எண்.01/2025 பிரிவு 7 of PC Act 1988 as Amended in 2018**

**முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி**

மாவட்டம் - வருவாய்துறை - விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள உதவி ஆணையர் (கலால்) திரு.கணேசன் என்பவர் பயன்படுத்திய நான்கு சக்கர வாகனம் - திடீர் இணை ஆய்வு - லஞ்ச பணம் எனக்கருதி கைப்பற்றியது - நடவடிக்கை எடுக்க வேண்டுவது - தொடர்பாக. நான் தற்போது விருதுநகர் சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலகத்தில் (நி.எ) (சிப்காட்), தனி வட்டாட்சியராக (சிப்காட்) 10.01.2025ஆம் தேதி முதல் பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகத்தில் நகரநிலவரித்திட்ட தனிவட்டாட்சியராக கடந்த 09.01.2025ஆம் தேதி வரை பணிபுரிந்தேன். அப்போது மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின்பேரில் கடந்த 08.01.2025ஆம் தேதி முதல் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகவும் இருந்து வருகிறேன். நேற்று (08.03.2025) மாலை சுமார் 17.00 மணியளவில் சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலகத்தில் (நி.எ) (சிப்காட்) பணியிலிருந்தபோது, விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உதவி ஆணையராக (கலால்) பணிபுரிந்துவரும் திரு.கணேசன் என்பவர், அவருக்கு தெரிந்த நபரின் சொந்த வாகனமான TN 59 AR 7144 TATA Indica என்ற நான்கு சக்கர வாகனத்தை வாடகைக்கு அமர்த்தி, அந்த வாகனத்தில் மாவட்டத்திலுள்ள தனியார் பார் உரிமையாளர்களிடம் அவர்களது பாரை தணிக்கை செய்யாமல் இருப்பதற்கும், பாரில் நடக்கும் தவறுகளை கண்டுகொள்ளாமல் இருப்பதற்கும், பார் உரிமையாளர்கள்மீது சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்காமல் இருப்பதற்கும் பிரதி மாதம் 10ஆம் தேதிக்குள் மாதாந்திர மாமூல் பணம் வசூல் செய்வதாகவும், அவ்வாறு இந்த (மார்ச்) மாதம் வசூலான மாமூல் பணத்துடன் நேற்று (08.03.2025) இரவு நேரத்தில் விருதுநகர் மாவட்ட எல்லையிலுள்ள விருதுநகர் ஊரக காவல்நிலைய சரக சத்திரரெட்டியபட்டி காவல் சோதனை சாவடியை கடந்து அவரது சொந்த ஊரான திருச்சிக்கு செல்வதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையிலும் மற்றும் விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலர்களின் வேண்டுகோளின்பேரில், நான் விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு மாலை 18.00 மணிக்கு வந்து விபரத்தை கேட்டு தெரிந்துகொண்டு, விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு காவல் ஆய்வாளர் திரு.இரா.பூமிநாதன் மற்றும் அவர்களது குழுவினருடன் நேற்று (08.03.2025) மாலை சுமார் 18.30 மணிக்கு விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்தைவிட்டு புறப்பட்டு, இரவு சுமார் 20.00 மணியிலிருந்து மேற்படி காவல் அதிகாரிகள் குழுவுடன் திருநெல்வேலி பகுதியிலிருந்து வருகின்ற வாகனங்களை கண்காணித்து கொண்டிருந்தபோது, இரவு சுமார் 22.00 மணியளவில் திருநெல்வேலி பகுதியிலிருந்து TN 59 AR 7144 TATA Indica என்ற நான்கு சக்கர வாகனம் சத்திரரெட்டியபட்டி காவல் சோதனை சாவடி வழியாக மதுரை செல்வதற்காக வந்த வாகனத்தை நான் மேற்படி அதிகாரிகள் அடங்கிய

குழுவினருடன் மறித்து விசாரித்தபோது, ஓட்டுநர் இருக்கையில் ஓட்டுநரும் உரிமையாளருமான திரு.சரவணகுமார் என்பவரும், பின்பக்க இருக்கையில் இடதுபக்கம் விருதுநகர் மாவட்ட உதவி ஆணையர் (கலால்) திரு.கணேசன் என்பவரும் அமர்ந்திருந்தனர். அவர்களிடம் விவரம் சொல்லி திடீர் இனை ஆய்வு செய்யப்பட்டது. பின்னர் விருதுநகர் மாவட்ட உதவி ஆணையர் (கலால்) திரு.கணேசன் என்பவரை சோதனை செய்ய, அவரது இடதுபக்க பேண்ட் சைடுபாக்கெட்டில் ரூ.3,560/- பணம் இருந்தது- அந்த பணம் பற்றி அவரிடம் கேட்க, இது தனது சொந்த பணம் என்றும், தான் இன்று (08.03.2025) செலவுக்கு வைத்திருந்த பணம் என்றும் சொன்னார். ஆகையால் அந்த ரூ.3,560/- பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவர் வந்த நான்குசக்கர வாகனத்தை சோதனை செய்ய, அந்த வாகனத்தின் பின்பக்க இருக்கையில் திரு.கணேசன் என்பவர் அமர்ந்திருந்த இருக்கைக்கு முன்பு, அவரது கால்களுக்கு இடையே மறைத்து வைத்திருந்த கட்டைப்பையின் உள்பகுதியில் திருமண தாம்பூலம் என்று அச்சடிக்கப்பட்ட மஞ்சள்பையினுள் கத்தை கத்தையாக 500 ரூபாய் நோட்டுக்கள் அடங்கிய கட்டுக்களும், சில 500 ரூபாய் நோட்டுக்கள் சுருட்டியவாறும், கருப்புகலர் மங்கிகுல்லாக்குள் கத்தை கத்தையாக 500 ரூபாய் நோட்டுக்கள் அடங்கிய கட்டுக்களும், சில 500 ரூபாய் நோட்டுக்கள் சுருட்டியவாறும் தனித்தனியாக மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அவற்றில் திருமண தாம்பூலம் என்று அச்சடிக்கப்பட்ட மஞ்சள்பையை பிரித்து பார்க்க, 500 ரூபாய் நோட்டுக்கள் ரப்பர் பேண்ட்டு சுற்றி மூன்று பண்டலாக இருந்தது. அவற்றை எடுத்து எண்ணிப்பார்க்க, ஒரு பண்டலில் 500 ரூபாய் நோட்டுக்கள் 100 எண்ணம் மொத்தம் ரூ.50,000/-ம், இரண்டாவது பண்டலில் 500 ரூபாய் நோட்டுக்கள் 100 எண்ணம் மொத்தம் ரூ.50,000/-ம், மூன்றாவது பண்டலில் 500 ரூபாய் நோட்டுக்கள் 20 எண்ணம் மொத்தம் ரூ.10,000/-ம் ஆக மொத்தம் ரூ.1,10,000/- இருந்தது. கருப்புகலர் மங்கிகுல்லாக்குள் இருந்த 500 ரூபாய் நோட்டுக்கட்டுக்களை எடுத்து பிரித்து பார்க்க, 500 ரூபாய் நோட்டுக்கள் ரப்பர் பேண்ட்டு சுற்றி ஏழு பண்டலாக இருந்தது. அவற்றை எடுத்து எண்ணிப்பார்க்க, ஒரு பண்டலில் 500 ரூபாய் நோட்டுக்கள் 60 எண்ணம் மொத்தம் ரூ.30,000/-ம், இரண்டாவது பண்டலில் 500 ரூபாய் நோட்டுக்கள் 42 எண்ணம் மொத்தம் ரூ.21,000/-ம், மூன்றாவது பண்டலில் 500 ரூபாய் நோட்டுக்கள் 29 எண்ணம் மொத்தம் ரூ.14,500/-ம், நான்கு முதல் ஏழு வரையிலான 4 பண்டல்களில் 500 ரூபாய் நோட்டுக்கள் தலா 100 எண்ணம் வீதம் 400 எண்ணம் மொத்தம் ரூ.2,00,000/- ஆக மொத்தம் ரூ.2,65,500/- இருந்தது. ஆக மேற்படி மொத்த பணம் ரூ.3,75,500/- பற்றி திரு.கணேசன் அவர்களிடம் கேட்க, அவர், தெரியாமல் நடந்துவிட்டது சார் என்றும், ஒவ்வொரு மாதமும் மாவட்டத்திலுள்ள தனியார் பார் உரிமையாளர்களிடம் அவர்களது பாரை தணிக்கை செய்யாமல் இருப்பதற்கும், பாரில் நடக்கும் தவறுகளை கண்டுகொள்ளாமல் இருப்பதற்கும், பார் உரிமையாளர்கள்மீது சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்காமல் இருப்பதற்கும் மாமூல வாங்குன பணம்தான் சார் இந்த பணம் என்றும், நீங்க பாத்து என்னைய காப்பாத்துங்க சார் என்றும் கூறினார். ஆகையால் சரி

காப்பாத்துறேன், எந்தெந்த பார் உரிமையாளர்களிடமிருந்து, எவ்வெவ்வளவு பணம் வாங்கியுள்ளீர்கள் என்பதை கூறுங்கள் என்று அவரிடம் குறிப்பாக கேட்க, அதற்கு அவர் அதெல்லாம் வேண்டாம் சார், விடுங்க சார் என்றும், நான் யார் யார்று அவங்க பேரெல்லாம் சொன்னா எனக்கு பின்னாடி பிரச்சினை வந்திரும் சார் என்று திரும்ப திரும்ப அதையே கூறினார். எனவே அவர் பயணம் செய்துவந்த நான்குசக்கர வாகனத்தில் அவரது கால்களுக்கு இடையில் எடுக்கப்பட்ட ரூ.3,75,500/- பணம் முழுவதும் விருதுநகர் மாவட்டத்தில் உதவி ஆணையராக (கலால்) பணிபுரிந்துவரும் திரு.கணேசன் ஆகிய அவர், விருதுநகர் மாவட்டத்திலுள்ள தனியார் பார் உரிமையாளர்களிடம் அவர்களது பாரை தணிக்கை செய்யாமல் இருப்பதற்கும், பாரில் நடக்கும் தவறுகளை கண்டுகொள்ளாமல் இருப்பதற்கும், பார் உரிமையாளர்கள்மீது சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்காமல் இருப்பதற்கும் மாதாந்திர மாமூல் பணமாக வசூல் செய்யப்பட்ட பணம் என்றும், அவரால் முறையான கணக்கு காட்டப்பட முடியாத பணம் என்றும் கருதி கைப்பற்றப்பட்டது. பின்னர் அந்த ரூபாய் நோட்டுக்கள் சுற்றியிருந்த கருப்புகலர் பங்கிகுல்லா மற்றும் திருமண தாம்பூலம் மற்றும் விவரங்கள் அச்சடிக்கப்பட்ட மஞ்சள்கலர் துணிப்பை ஆகியவையும் கைப்பற்றப்பட்டது. பின்னர் ஓட்டுநரும், உரிமையாளருமான திரு.சரவணகுமார் என்பவரையும், வாகனத்தையும் சோதனை செய்ய, அவரிடம் அவரது சொந்தப்பணம் ரூ.520/- மட்டும் இருந்தது. அந்த வாகனத்தில் கைப்பற்றக்கூடிய வேறு எந்தவிதமான பணமோ, ஆவணங்களோ இல்லை. பின்னர் அந்த இடம் சோதனை நடவடிக்கைகள் தயார் செய்வதற்கு ஏற்ற இடமாக இல்லாததால், அங்கிருந்து புறப்பட்டு, திரு.கணேசன் என்பவர் பணிபுரியும் விருதுநகர் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடத்தின் 3ஆம் தளத்திற்கு இரவு சுமார் 22.45 மணிக்கு வரப்பட்டது. பின்னர் அலுவலகத்திற்கு வந்து, அலுவலகத்தில் அலுவலக பணியாளர்களின் தனிநபர் கையிருப்பு பணப்பதிவேடு பற்றி திரு.கணேசன் அவர்களிடம் கேட்க, அவர் தனிநபர் கையிருப்பு பணப்பதிவேடு பராமரிக்கப்படவில்லை என்று கூறினார். இது தொடர்பாக திடீர் இணை ஆய்வு செயல்முறைகள் ஒன்று 08.03.2025 இரவு 22.00 முதல் 09.03.2025 அதிகாலை 01.00 மணி வரைக்குள் தயார் செய்யப்பட்டது. பின்னர் உடன் மேற்படி உதவி ஆணையர் (கலால்) திரு.கணேசன் அவர்களை விசாரித்து தனியாக வாக்குமூலம் ஒன்றை பதிவு செய்தேன். மேற்படி உதவி ஆணையர் (கலால்) திரு.கணேசன் என்பவரால் முறையான கணக்கு காட்டமுடியாத ரூ.3,75,500/- பணம் முழுவதும் விருதுநகர் மாவட்டத்தில் உதவி ஆணையராக (கலால்) பணிபுரிந்துவரும் திரு.கணேசன் ஆகிய அவர், விருதுநகர் மாவட்டத்திலுள்ள தனியார் பார் உரிமையாளர்களிடம் அவர்களது பாரை தணிக்கை செய்யாமல் இருப்பதற்கும், பாரில் நடக்கும் தவறுகளை கண்டுகொள்ளாமல் இருப்பதற்கும், பார் உரிமையாளர்கள்மீது சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்காமல் இருப்பதற்கும் மாதாந்திர மாமூல் பணமாக வசூல் செய்யப்பட்ட பணம் என்றும், அவரால் முறையான கணக்கு காட்டப்பட முடியாத பணம் என்றும்

தெரியவந்ததால் திரு.கணேசன், உதவி ஆணையர் (கலால்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விருதுநகர் என்பவர்மீது வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் திடீர் இணை ஆய்வு செயல்முறைகள் நாள் 08.03.2025, மேற்படி உதவி ஆணையர் (கலால்) திரு.கணேசன் அவர்களின் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.3,75,500/- ஆகியவற்றையும் சமர்ப்பிக்கிறேன். (sd) பெ.ராஜீவ்காந்தி 9.3.25 (P.ராஜீவ்காந்தி) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர். விருதுநகர் மாவட்டம். (தனி வட்டாட்சியர் (சிப்காட்), சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலகம், (நிஎ) (சிப்காட்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விருதுநகர்). Sir, Received the complaint and registered a case in Virudhunagar, V&AC, Cr.No.1/2025 U/s 7 of PC Act1988 as Amended in 2018 on 09.03.2025 at 04.30 hrs. The Original FIR and complaint are submitted to the Hon'ble CJM cum Spl. Judge for PC Act cases, Srivilliputhur and copies submitted to the concerned officers. (sd) R.Boominathan 9/3/25 Insp of Police V&AC, VNR.

Inspr of Police,
V&AC, VNR.